கழகத்தின் மூத்த முன்னோடி - தந்தை பெரியார் விருது பெற்ற

பாப்பம்மாள் நம்மை சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்டார்!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை,செப்.28-

கழகத்தின் மூத்த முன்னோடி பாப்பம்மாள் அவர்கள் நம்மையெல்லாம் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு சென்று விட்டார். என் குடும்பத்தில் ஒருவரைப் பிரிந்த வலியுடன் தவிக்கின்றேன் என கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருக்க முடன் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27-09-2024), வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

"கழக முன்னோடியும் - கடந்த 17-ஆம் நாள் நடைபெற்ற முப்பெரும் விழாவில் பெரியார் விருது பெற்றவருமான திருமிகு. பாப்பம்மாள் அவர்கள் 108 அகவையில் மறைவெய்தினார் என்ற துயரச் செய்தியறிந்து கலங்கினேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதும் - முத் தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் பற்றுக் கொண்டு, கழகம் தொடங்கப்பட்ட நாள் முதல் தன்னை இயக்கத்துக்காக அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றியவர்.

1965-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தித் திணிப்பிற்கு எதிரான போராட்டம் தொடங்கி, தமிழ்நாட்டு மாணவர்களின் நலன் காக்க நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம் வரை அத் தனை போராட்டக்களங்களையும் நெஞ்சுரத் தோடு எதிர்கொண்டவர் அவர்.

1959-ஆம் ஆண்டு தேக்கம்பட்டி ஊராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமிகு.

பாப்பம்மாள் அவர்கள், 1964-இல் காரமடை ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினராகவும், பின்னர் தேக்கம்பட்டி ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்று பணி யாற்றினார்.

1970-ஆம் ஆண்டு தொடங்கி 45 ஆண்டு காலம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக உழவர் விவாதக்குழு உறுப்பினராகச் செயல் பட்டார்.

1965-ஆம் ஆண்டிலேயே மாதர் சங்கத் தலைவராகச் செயல்பட்டு, கிராமப் பெண்களின் முன்னேற்றத்துக்கான சமூகப் பணிகளை மேற்கொண்டார்.

தனது இறுதிமூச்சு வரையில், சுறுசுறுப்பாக வயலில் இறங்கி வேளாண் பணிகள் செய்து வந்தவர் திருமிகு. பாப்பம்மாள் அவர்கள்.

திருமிகு. பாப்பம்மாள் அவர்களின் வாழ்வை யும் தொண்டையும் போற்றும் வகையில் ஒன் றிய அரசு சார்பாக கடந்த 2021-ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. அப்போது, "உற்சாகத்துடனும், கொள்கை உணர்வோடும் எப்பொழுதும் புன்னகை மாறாத பாப்பம்மாள் பாட்டி நமக்கெல்லாம் உந்துசக்தி!" என்று அவரை வாழ்த்தினேன்.

கழக முப்பெரும் விழாவில், "ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டின் அடையாளம்" என அவரை மனம் நெகிழப் பாராட்டி மகிழ்ந்திருந்தேன். ஆனால் இன்று சொல்லொணாத் துயரத்தில் நம்மையெல்லாம் ஆழ்த்தி விட்டு அவர் நம்மை விட்டு பிரிந்துவிட்டார்.

அண்ணா அறிவாலயத்திலும், எனது இல் லத்திலும் திருமிகு. பாப்பம்மாள் அவர்களைச் சந்தித்து உரையாடிய ஒவ்வொரு தருணமும் என் நெஞ்சில் எப்போதும் நீங்காமல் பசுமை யாக இருக்கும்.

என் குடும்பத்தில் ஒருவரைப் பிரிந்த வலியு டன் தவிக்கிறேன். திருமிகு. பாப்பம்மாள் அவர் களை இழந்து தவிக்கும் குடும்பத்தினர், உறவி னர்கள், கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு கழகத் தலைவர்- முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கலைத் தெரிவித்துள் ளார்.

தமிழ்நாடு அரசில் 51 உதவி வழக்குரைஞர் பணி!

டி.என்.பி.எஸ்.சி. அறிவிப்பு!

சென்னை,செப்.28-

அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் (கிரேடு-2) பதவிக்கான நேரடி நியம னத்திற்கான அறிவிப்பை தமிழ்நாடு அரசுப் பணியா ளர் தேர்வாணையம்(டிஎன் பிஎஸ்சி) வெளியிட்டுள் ளது.

அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் (கிரேடு-2) பதவிக்கான நேரடி நியம னத்திற்கான அறிவிப்பை தமிழ்நாடு அரசுப் பணியா ளர் தேர்வாணையம்(டிஎன் பிஎஸ்சி) வெளியிட்டுள் ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் அக்டோபர் 12 ஆம் தேதிக்குள் விண் ணப்பங்கள் வரவேற்கப்படு கின்றன.

பணி: அரசு உதவி குற்ற வியல் வழக்குரைஞர் (கிரேடு-2)

காலியிடங்கள்: 51

தகுதி: ஏதாவதொரு பல் கலை, நிறுவனத்தில் இள நிலை சட்டம் முடித்திருத்த வேண்டும். வழக்குரைஞர் சங்கத்தில் பதிவு செய்திருப் பதோடு, குறைந்தபட்சம் குற்றவியல் நீதிமன்றங்களில் 5 ஆண்டுகள் வழக்குரைஞ ராக பணியாற்றிருக்க வேண்டும். போதிய தமிழ் அறிவு பெற்றிருத்தல் வேண் டும்.

வயதுவரம்பு: 1.7.2024 தேதியின்படி 26 வயது பூர்த்தி அடைந்தவராகவும், 36 வயது நிறைவடைந்திருக்கக் கூடாது.

தேர்வு செய்யப்படும் முறை: முதல்நிலைத் தேர்வு மற்றும் முதன்மைத் தேர்வு (எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு அடங்கி யது) மூலம் தகுதியானவர் கள் தேர்வு செய்யப்படுவர்.

முதல்நிலைத் தேர்வா னது முதன்மைத் தேர்வுக் காக தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கான தேர் வாகும். முதன்மைத் தேர் வுக்கு அனுமதிக்கத் தகுதி யானவர்களாக அறிவிக்கப்படும் தேர்வர் கள் முதல்நிலைத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண் கள், இறுதித் தகுதிக்கு கணக்கில் எடுத்துக் கொள் ளப்படாது.

குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களின் அடிப்ப டையில் முதன்மைத் தேர் விற்கு தகுதியான தேர்வர்க ளின் பட்டியல் தேர்வாணையத்தால் வெளி யிடப்படும்.

முதல்நிலைத் தேர்வு நடைபெறும் நாள்: 14.12.2024

முதன்மைத் தேர்வு: முதல்நிலைத் தேர்வு முடிவு கள் அறிவிக்கப்படும்போது வெளியிடப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: தகுதியானவர்கள் www.tnpscexams.in என்ற இணைய தளத்தின் மூலம் ஆன்லை னில் விண்ணப்பிக்க வேண் டும்.

தேர்வு மையம்: சென்னை, கோயம்புத்தூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, நாகர்கோவில், மதுரை, நாமக்கல், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல் வேலி, வேலூர், விருதுநகர்.

முதன்மைத் தேர்வானது சென்னையில் மட்டும் நடைபெறும்.

தேர்வுக் கட்டணம்: தேர் வுக் கட்டணச் சலுகை கோராதவர்கள் முதல்நிலைத் தேர்வுக்கு கட் டணமாக ரூ.100 செலுத்த வேண்டும்.

முதல்நிலைத் தேர்வு முடிவுகளின் அடிப்படை யில் முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர் கள், தேர்வுக் கட்டணச் சலுகை கோராத நிலையில் முதன்மைத் தேர்வுக்கான கட்டணமாக ரூ.200 செலுத்த வேண்டும். கட்ட ணத்தை இணைய வங்கி, வங்கிகளின் பற்று அட்டை, கடன் அட்டை)இவற்றில் ஏதேனும் ஒரு முறையில் ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

முதல்நிலைத் தேர்வில் சட்டம் தொடர்பான ஒரு தாளுடன் கூடுதலாக பொது அறிவுத் தாளும், முதன்மைத் தேர்வில் ஏற்க னவே உள்ள சட்டம் தொடர்பான 4 தாள்களு டன் கூடுதலாக கட்டாய தமிழ் மொழித் தாளும் இடம்பெறுகின்றன. தமிழ் மொழித் தாளில் தேர்ச்சி பெற்றாலே போதுமானது. இதில் பெறும் மதிப்பெண் கள் தெரிவு பட்டியலுக்கு எடுத்துக்கொள்ளப்படாது.

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை,செப்.28-

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செய லாளரும் அமைச்சரு மான மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோ சனைக் கூட்டம் இன்று (28-9-2024) சனிக்கிழமை காலை 10 மணியளவில் சைதை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவல

கத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேக ரன் தலைமையில் நடை பெற உள்ளது.

எனவே இக்கூட்டத் தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர் வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றி யக் கழகச் செயலாளர் கள், தலைமைப் பொதுக் குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப் பாளர்கள், பிற அணிக ளின் மாவட்ட அமைப் பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகி றேன்.

பொருள் : வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற் றும் கழக ஆக்கப் பணி கள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - மக் கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரம ணியன் தெரிவித்து ள்ளார்.

அரசு ஊழியர் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று

காலாண்டு விடுமுறையை நீட்டிப்புச் செய்த அமைச்சருக்கு நன்றி!

அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, செப்.28-

தமிழ்நாடு அரசு ஊழி யர்கள், ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் கோரிக் கையை ஏற்று காலாண்டு விடுமுறையை நீட்டிப்பு செய்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்க ளுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார் பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் நன்றி தெரி வித்துள்ளார்.

அவரது அறிக்கை வரு மாறு:-

காலாண்டு தேர்வு செப்டம்பர் 19-ஆம் தேதி தொடங்கி 27-ஆம் தேதி வரை தேர்வுகள் நடைபெற்று வருகிறது. வருகிற 28-ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 2-ஆம் தேதி வரை 5 நாட்கள் மட்டுமே விடு முறை அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த ஐந்து நாட்கள் விடுமுறையில் விடைத் தாள் திருத்தும் பணி மற் றும் மாணவர்களின் கட் டமைப்பு பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ள முடியாது எனவும் மாண வர்களுக்கும் மன அழுத் தம் ஏற்படும் எனவும் மாணவர்கள் நலன் ஆசி ரியர்களின் அக்கறை கொண்ட பள்ளிக்கல் வித்துறை அமைச்சர் அன் பில் மகேஷ் பொய்யா மொழி அவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் கள் ஆசிரியர்கள் நல கூட் டமைப்பின் கோரிக்கை யைப் பரிசீலித்து 5 நாள் விடுமுறை நீட்டித்து வரும் அக்டோபர் 6-ஆம் தேதி வரை விடுமுறை அளித்து காலாண்டு விடு முறையை 9 நாட்களாக நீட்டிப்பு செய்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் கள் ஆசிரியர்கள் நல கூட் டமைப்பு சார்பில் பள் ளிக்கல்வித்துறையில் பல மாற்றங்களை மாணவர் கள் ஆசிரியர்கள் நலன் கருதி செய்துவரும் பள் ளிக்கல்வித்துறை அமைச் சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்க ளுக்கும், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் எஸ். மதுமதி ஐ.ஏ.எஸ் அவர்க ளுக்கும் பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனை வர் ச.கண்ணப்பன் அவர்களுக்கும் மற்றும் தொடக்கக்கல்வி துறை இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் அவர்களுக் கும் நெஞ்சார்ந்த நன்றிக ளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சா.அரு ணன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருவேற்காடு அயனம்பாக்கம் சுந்தர சோழவரம் ஆகிய அரசுப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவ - மாணவிகளுக்கு முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ 130 விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் நகர் மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன், மாநகர ஒன்றிய செயலாளர்கள் ப.ச.கமலேஷ், சன் பிரகாஷ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ. பவுல், தலைமை ஆசிரியர்கள் அனிதா, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பார்த்தசாரதி நிர்வாகிகள் தெய்வசிகாமணி, குமார், எஸ்.சரவணன், கோலடி ஜெ.சரவணன், நடராஜ் , குமாரசாமி, சாந்தி ராஜா,எம்.காந்தி, சத்தியா, இளங்கோ, பிரதானம், சாது, ஜேக்கப், பேபிஸ்ரீ, அமலேஸ்வரி, இயேசு, என்.ராஜ், நரேஷ், நாராயணன், அப்பு(எ)ஜெபராஜ் உள்பட பலர் உள்ளனர்.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கோரிக்கையினை ஏற்று,

நாமக்கல் மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி அமைத்திட அரசிற்கு பரிந்துரை செய்யும்!

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுக் கணக்குக் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை உறுதி!

நாமக்கல், செப். 28 -

நாமக்கல் மாவட்ட ஆட் சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பேர வையின் பொதுக் கணக்குக் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை தலை மையில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

குழு உறுப்பினர்கள் / சட் டமன்ற உறுப்பினர்கள் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி (போளூர்), கோ.ஐயப்பன் (கடலூர்), எஸ்.சந்திரன் (திருத்தணி), டாக்டர் சி. சரஸ்வதி (மொடக்குறிச்சி), எஸ்.சேகர் (பரமத்திவேலூர்), கே.ஆர்.ஜெயராம் (சிங்காநல் லூர்) ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாள ரும், மாநிலங்களவை உறுப் பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மேயர் து.கலாநிதி ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக் குக் குழுத்தலைவர் கு.செல்வ பெருந்தகை தெரிவித்ததா வது, இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கை துறை தலைவர் அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் திட் டங்கள் மற்றும் நிதிநிலை குறித்து சுழற்சி முறையில் 33 விழுக்காடு பணிகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக் கும். அந்த அறிக்கையின் அடிப்படையில் சம்மந்தப் பட்ட மாவட்டத்தை சார்ந்த தணிக்கை பத்திகள் குறித்து பொதுக் கணக்குக் குழு மாவட் டத்தில் நேரடியாக ஆய்வு செய்யும். நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றம் சார் பாக தேர்வு செய்யப்பட்ட பொதுக்கணக்கு குழுவினர் அந்தந்த மாநிலங்களில் ஆய்வு செய்யும். இது நடமா டும் சட்டப்பேரவை எனப்ப டுகிறது.

பொது கணக்கு குழு என் பது நாடாளுமன்ற பொது கணக்கு குழு, சட்டமன்ற பொது கணக்கு குழு இல்லா மல் ஜனநாயகம் முழுமை அடையாது என்று நம் இந் திய அரசியலமைப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது. மக்க ளின் சார்பில் நிர்வாகத்தில் கணக்கு வழக்குகளை பொது கணக்கு பராமரித்து உண் மைத் தன்மையை நிலைநாட் டுகிறது. மேலும் அரசு ஒதுக் கீடு செய்யும் நிதியை செலவழிக்க சட்டமன்றத்திற் கும், நாடாளுமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கும் பட்சத் தில், அரசின் நிதியை எவ் வாறு முழுமையாக செலவ ழிக்கப்படுகிறது என்பது குறித்து ஆய்வு செய்யும் பணி யில் பொதுக்கணக்கு குழு ஈடுபடுகிறது.

மகாத்மா காந்தியடிகள் தூய்மையான பொது வாழ்க் கையில் கணக்கு வழக்கு களை சிறப்பாக கையாள்வது என்பது முக்கியமான ஒன்றா கும் என வலியுறுத்தி உள் ளார். இலட்சியங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நாடாளுமன்ற மற்றும் சட்ட மன்ற பொதுக்கணக்கு குழு செயல்பட்டு வருகிறது. சமூக பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அர சின் சார்பில் ஒதுக்கப்படும் ஒவ்வொரு ரூபாயினையும் ஆக்கபூர்மாகவும், சிக்கனமாகவும், நம்பிக்கை யாகவும் செலவிடப்படு வதை நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற பொதுக்கணக்கு குழு உறுதி செய்கிறது. பொதுக் கணக்கு குழு பழ மையானதாகவும் சட்டமன் றம் மற்றும் நாடாளுமன்றத் தின் மற்ற குழுக்களுக்கு தாய் குழுவாக செயல்படுகிறது. செலவினத்தை கவனமாக கையாண்டால் தான் குறுகிய காலம் மற்றும் நீண்ட கால வளர்ச்சியினை இலகுவாக எய்திட இயலும்.

சமூக பொருளாதார நோக்கத்திற்காக நாட்டின் வளங்களை திறம்பட பயன் படுத்துவது குறித்து பொதுக் கணக்கு குழு ஆராய வேண் டும். மேற்கண்ட இரண்டு நோக்கங்களை சமநிலைப்ப டுத்துவது குறித்து இந்த குழு ஆய்வு செய்யும். நாடாளு மன்றத்தில் நடைபெற்ற நூற் றாண்டு விழாவில் மேதகு குடியரசு தலைவர் அவர்கள் 1984ல் அப்போதைய பாரத பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களின் உரையில் அர சாங்கம் ஒதுக்கீடு செய்யும் 1 ரூபாயில் 16 காசுகள் மட் டுமே மக்களை சென்றடைகி றது என்பதை சுட்டிக்காட்டி உரையாற்றினார்கள். ஏறத் தாழ 35 ஆண்டுகளுக்கு முன் னரே தெரிவித்ததின்படி அரசு ஒதுக்கீடு செய்யும் ஒவ்வொரு ரூபாயும் 100 சத விகிதம் பொதுமக்களை சென்றடைவதை அனைத்து துறை அலுவலர்களும் உறுதி செய்திட வேண்டும்.

மாநிலங்களவை உறுப்பி னர்/நாமக்கல் மாவட்ட மத் திய கூட்டுறவு வங்கித் தலை வர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கோரிக்கை யினை ஏற்று, நாமக்கல் மாவட்டத்தில் அரசு பொறி யியல் கல்லூரி அமைத்திட வும், ஆனங்கூர் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்ட டங்கள் கட்டவும் அரசிற்கு பொது கணக்கு குழு பரிந் துரை செய்யும் என தமிழ் நாடு சட்டமன்ற பேரவை யின் மாண்புமிகு பொதுக் கணக்குக் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை தெரி வித்தார்.

இக்கூட்டத்தில் இந்திய கணக்காய்வு மற்றும் தணிக் கைத் துறைத் தலைவரின் தணிக்கை பத்திகள் தொடர் பாக தமிழ்நாடு நுகர்பொருள் வணிபக் கழகம், சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, பள்ளிக் கல்வித் துறை, கைத்தறி மற்றும் தூணிநூல் துறை, சமூக பாதுகாப்பு திட் டங்கள், நீர்வளத்துறை, உயர் கல்வித் துறை, தொழிலாளர் நல துறை, தேசிய நெடுஞ் சாலை துறை, மின்சார வாரி யம், வணிக வரித்துறை உள் ளிட்ட துறைகளின் விளக்கங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பல்வேறு துறைகளின் சார்பில் 12 பய னாளிகளுக்கு ரூ.92.27 இலட் சம் மதிப்பில் அரசு நலத் திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழுத்த லைவர் கு.செல்வபெருந்தகை வழங்கினார்.

இக்கூட்டத்தில் துணைச் செயலாளர் பா.ரேவதி, குழு அலுவலர் வி.சுமதி, சார்புச் செயலாளர் ஜெ.பாலசீனிவாசன், மாவட்ட காவல் கண்காணிப் பாளர் எஸ்.ராஜேஸ் கண் ணன், மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட வன அலுவலர் ச.கலாநிதி., இ.வ.ப., திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சு.வடிவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, நாமக்கல் வரு வாய் கோட்டாட்சியர் ஆர். பார்தீபன், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (27.09.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் 2024-2025ஆம் ஆண்டின் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மானியக் கோரிக்கையின் மீதான புதிய அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில், அறிவித்த திட்டங்களை குறித்த பல்வேறு கட்டிட வல்லுநர்களின் முன்மாதிரி வரைப்படங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தும், நடைபெற்றுவரும் பல்வேறு பணிகளின் தற்போதைய செயல்பாடுகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அயாலசுப்ரமணியம், கண்காணிப்புப் பொறியாளர்கள் பா.ராஜமகேஷ்குமார், மா.பாலமுருகன், மாவட்ட வருவாய் அலுவலர்கள், முதுநிலை திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்